KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 6, No. 03 (2026)

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Impact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: 10.63300/kalanjiyam.v6i03.65

UGC Approved by Transparent Peer Review

ARTICLES

ஈழத்தின் தமிழிசை - வளர்ச்சியும் சவால்களும்

Tamil Music in Eelam - Development and Challenges

Robert Arudsegaran Thavanathan[1,*]

[1] University of Jaffna, Sri Lanka.

***Corresponding author:** Robert Arudsegaran Thavanathan, arudsegaran@univ.jfn.ac.lk

ARTICLE INFO

Article history
Received: 1 November 2026
Revised: 5 November 2026
Accepted: 10 November 2026

Article ID
KIJTS-2026-0052

Peer review
Double-blind peer review

Keywords
Music
Ealam
Tamil Music
Development
Musicians

ABSTRACT

Eelam Tamils have existed for several millennia as an ethnic community with distinctive artistic and cultural traditions. Owing to the geographical proximity of Eelam to Tamil Nadu, the influence of Tamil Nadu's artistic and cultural traditions has been widely evident in Eelam. Traditionally, Eelam Tamils were actively involved in various folk art forms, including Vilaasam and Koothu. Subsequently, they became attracted to musical theatre introduced from Tamil Nadu, which paved the way for the gradual introduction of classical music and, later, dance traditions into Eelam.

The contributions of Tamil Nadu-based musicians and musical institutions have played a significant role in the development of music in Eelam. In particular, musicians who received formal training at the Department of Music, Annamalai University, and obtained the Sangeetha Bhooshanam qualification contributed substantially to the enrichment of Eelam's classical music tradition. Musicians trained and guided by artists from Tamil Nadu occupied prominent positions in the musical history of Eelam.

During and after the emergence of the Tamil Isai movement in Tamil Nadu, several cultural activists in Eelam also initiated activities promoting Tamil music. However, these initiatives did not appear to reflect a distinct conceptual understanding of Eelam Tamil music. Even after the 1980s, Eelam Tamil songs were generally confined to a few concluding items in classical music concerts, rather than forming the basis of entire performances.

Against this background, this study examines the concept of Eelam Tamil music, its development, and the challenges it faces. The research is primarily based on interviews with musicians and their perspectives on the subject.

How to cite this article: Thavanathan, R. A. (2026). ஈழத்தின் தமிழிசை - வளர்ச்சியும் சவால்களும். *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *6*(03), 747. https://doi.org/10.63300/kalanjiyam.v6i03.64
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

ஆய்வுச் சுருக்கம்

ஈழத்தமிழர்கள் தனித்துவமான கலை, பண்பாட்டு வரன்முறைகள் கொண்ட இனமாகப் பல ஆயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து வருகின்றனர். தமிழ் நாட்டிற்கு அருகில் இருக்கும் நிலப்பகுதியாக ஈழம் இருப்பதால் தமிழகக் கலைகளின் செல்வாக்கும் ஈழத்தில் பரவிக் காணப்படுகின்றது. விலாசம், கூத்து முதலான நாட்டார் கலைகளில் அதிகமாக ஈடுபட்டு வந்த ஈழத் தமிழர்கள் தமிழ் நாட்டில் இருந்து ஈழத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்ட இசைநாடகக் கலையினால் கவரப்பட்டு அக்கலையிலும் ஈடுபட்டு வந்தனர். இதன் தொடர்ச்சியாகவே ஈழத்தில் செவ்வியல் இசை அறிமுகமாகத் தொடங்கியது. இதன் பின்னர், ஆடற் கலையும் ஈழத்தில் பரவலாக்கம் பெற்றது.

ஈழத்தின் இசை வளர்ச்சியில் தமிழகக் கலைஞர்களினதும் இசை நிறுவனங்களினதும் பணிகள் முக்கியமானவைகள் ஆகும். அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைத் துறையில் கற்றுச் சங்கீதபூசணம் எனும் பட்டம் பெற்றவர்களால் ஈழத்தின் செவ்வியல் இசை மரபு செழுமை பெற்றது எனலாம். தமிழகக் கலைஞர்களின் ஆசிரியத்துவத்திலும் வழிப்படுத்தலிலும் உருவான இசையாளர்களே ஈழத்தின் இசைக் கலை வரலாற்றில் முதன்மையானவர்களாக விளங்கி வந்தனர்.

தமிழ் அல்லாத மொழிப் பாடல்களுக்கான எதிர்ப்பும் தமிழிசை எழுச்சியும் தமிழிசை இயக்கமும் தமிழ் நாட்டில் தோன்றிய காலத்திலும் அதற்குப் பின்னரும் ஈழத்தில் கலைச் செயற்பாட்டாளர்கள் சிலர் தமிழிசை சார்ந்த செயற்பாடுகளை முன்னெடுத்தனர். தமிழிசை மன்றங்கள், தமிழிசை விழாக்கள் என்பன ஈழத்திலும் நிகழ்த்தப்பட்டன. எனினும் இச்செயற்பாடுகளில் ஈழத்துத் தமிழிசை பற்றிய எண்ணக்கரு கடந்த காலங்களில் கலைஞர்களிடையே இருந்ததாகத் தெரியவில்லை. ஈழத்தில் நிகழ்ந்த தமிழிசை விழாக்கள் ஈழத்தின் தமிழிசையை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை.

எனினும் பிற்காலத்தில், குறிப்பாக 1980ஆம் ஆண்டுகளுக்குப் பின்னர் இசையரங்கின் நிறைவில் ஒரு சில "சில்லறைப்" பாடல்களை மட்டுமே ஈழத்துப் பாடல் என்னும் பெயரில் இசைக்கும் மரபு ஈழத்தில் தொடங்கியது எனலாம். முழுமையான இசையரங்கை ஈழத்துக் கீர்த்தனைகளை அடிப்படையாகக் கொண்டு நிகழ்த்துவதற்கு எந்தவொரு இசையாளரும் கடந்த காலத்தில் முன்வரவில்லை என்பது உண்மையே.

ஈழத்தின் தமிழிசை எனும் கருத்தியலும் அது சார்ந்த சிந்தனையும் ஈழத்தின் இசையாளர்களிடம் சிறிதளவேனும் வளர்க்கப்படவில்லை. இவ்வாறான நிலையின் ஈழத்தின் தமிழிசை பற்றியும் அதன் சவால்கள் பற்றியும் இக்கட்டுரை ஆராய்வதை முதன்மை நோக்கமாக கொண்டு கலைஞர் சந்திப்புக்களையும் அவர்கள் கருத்துக்களையும் அடிப்படையாக கொண்டு இந்த ஆய்வு நிகழ்த்தப்படுகிறது.

திறவுச் சொற்கள்

இசை, ஈழம், தமிழிசை, வளர்ச்சி, இசையாளர்கள்

அறிமுகம்

மரபு வழியான, தனித்துவமான பண்பாட்டு முறைமைகளைக் கொண்டதோர் இனமாக ஈழத்தமிழினம் இருக்கின்ற போதும் தமிழ் நாட்டுக் கலைகளை மீளளிக்கை செய்யும் பண்புடையோராகவே ஈழத்துக் கலைத்துறையினர் நூற்றாண்டுகள் கடந்தும் செயற்பட்டு வருகின்றனர். ஈழத்தமிழினம் தமிழ் நாட்டின் மக்கள் தொகையோடு ஒப்பிடும் போது மிகச் சிறிய இனமாக இருக்கின்றது. இரு நாட்டவரும் ஒரு மொழி பேசும் மக்களாக இருந்த போதிலும் ஈழத்தமிழர்கள் பேசுகின்ற பேச்சு வழக்கு என்பது தனிச்சிறப்புக் கொண்டதாகவும் தூய தமிழ்ச் சொற்களைக் கொண்டதாகவும் விளங்குகின்றமை யாவரும் அறிந்ததே.

ஈழத்தின் கலைத் துறையினர் மத்தியிலும் இரசிகர்கள் மத்தியிலும் இந்தியக் கலைமரபுகளின் தாக்கமே மேலோங்கி இருப்பதால் ஈழத்துக் கலைஞர்கள் ஈழத்தின் கலைகளை வளர்த்தெடுப்பதில் கடந்த காலங்களில் அக்கறை காட்டவில்லை. தமிழ் நாட்டுக் கலைகளின் தீவிர இரசிகர்களாகவே இன்று வரை வாழ்ந்து வருகின்றனர். ஈழத்துப் புலவர்கள், கவிஞர்கள், வாக்கேயக்காரர்கள் போன்றோரின் பாடல்களைத் தமது இசையரங்குகளில் மிக அரிதாகவே இசையாளர்கள் இணைத்து வந்துள்ளனர்.

பாடுபவரிற்கோ பார்வையாளருக்கோ சிறிதளவும் விளங்காத மொழியில் பாடல்களைப் பாடுவதில் ஆர்வம் காட்டிவரும் ஈழத்தின் இசையாளர்கள் தாய்மொழியாகிய தமிழ் மொழியில் பாடுவதைத் தவிர்த்து வந்துள்ளமை வியப்பானதே எனலாம். பல ஆயிரக்கணக்கான பாடல்கள் ஈழத்துப் புலவர்களால் ஈழத்தின் ஆலயங்கள் மீது பாடப்பட்டிருக்கின்ற போதும் ஈழத்துத் தமிழிசை இதுவரையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி நிலையை எட்டவில்லை. இதற்கான காரணங்களையும் தீர்வுகளையும் இக்கட்டுரையானது முன்வைக்க முயல்கிறது.

தமிழிசை என்னும் கருத்தியல்

தமிழகமும் ஈழமும் தமிழ் மொழி பேசுகின்ற மக்களைக் கொண்ட நிலப்பகுதிகளாக இருப்பதால் பண்பாட்டுப் பரிமாற்றங்கள் பல நூற்றாண்டுகளாக இருந்து வருகின்றன. சமயச் சடங்குகள், பண்பாட்டு நிகழ்வுகள், நுண்கலைகள் போன்ற அனைத்திலும் தமிழகத்தின் தாக்கம் இன்று வரை ஈழத்தில் முதல்நிலை வகித்து வருகின்றது. இந்த வகையில் ஈழத்தில் தற்காலத்தில் வழக்கில் இருக்கும் செவ்வியற் கலைகளான இசைக்கலை, ஆடற்கலை என்பன தமிழகத்தில் இருந்து ஈழத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டவையாகவே கருதப்படுகின்றன.

இந்தியாவில் தற்காலத்தில் ஹிந்துஸ்தானி இசை, கர்நாடக இசை என்னும் இரு வகையான இசை முறைகள் வழக்கில் உள்ளன. கர்நாடக இசை என்பதன் பொருள் மிகவும் பழமையான இசை என்றும் பல மொழி கலந்த இசை என்றும் கருதப்படுகின்றது. நாயக்கர்கள் தென்னிந்தியாவை ஆண்ட காலத்திலேயே

தென்னக இசைக்கு இப்பெயர் காரணப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

தமிழ் மொழி பேசும் மக்கள் வாழ்ந்த தமிழகத்தில் பிறந்து வளர்ந்து தமிழிசையைக் கற்று இசையறிவை வளர்த்துக்கொண்டவர்களே கர்நாடக இசையின் மும்மூர்த்திகள் என அழைக்கப்படுகின்றனர். இம் மும்மூர்த்திகள் தெலுங்கிலும் வட மொழியிலும் அதிகமான பாடல்களை இயற்றியுள்ளனர். இதனால், தமிழிசை மட்டும் வழக்கில் இருந்த தமிழ்நாட்டில் பிற மொழிப்பாடல்களின் ஆதிக்கம் அதிகரித்தது. நாயக்கர் காலத்தில் இருந்து தமிழ் மொழி எதிர்ப்பு, தமிழ் நிராகரிப்பு, புறக்கணிப்பு என்பன தமிழகத்தில் நிலவி வந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதனால் தமிழ் மொழியில் அமைந்த பாடல்கள் தமிழிசை என்னும் வரையறைக்குள் அடக்கப்பட்டன. அத்துடன் ஏனைய மொழிப் பாடல்களே இசைக்குரிய தகுதியுடையன என்னும் கருத்தியல்களும் இசையாளர்களிடையே குடி கொண்டன. திருமுறைப் பாடல்கள் முதலான அனைத்துத் தமிழ்ப் பாடல்களும் தமிழிசை என்னும் பெயரில் இன்று வரை அழைக்கப்பட்டு வருகின்றது. தற்காலத்தில் கர்நாடக இசை என்னும் வகைப்பாட்டினுள் தமிழிசையையும் ஒரு பகுதியாகச் சிலர் குறிப்பிட்டு வருகின்றனர்.

தென்னாட்டில் அக்காலத்தில் நிலவிய இசை தமிழிசை மட்டுமே எனவும் மிகவும் தொன்மையான தமிழிசையைக் கற்றுக் கொண்ட தியாகராஜ சுவாமிகள் முதலான ஏனைய வாக்கேயக்காரர்கள் பலர் தமது தாய் மொழிகளில் பாடல்களை இயற்றியுள்ளனர் எனவும் தற்காலத்தில் வழக்கில் இருக்கும் கர்நாடக இசை என்பது தமிழிசையின் ஒரு கிளை வடிவமே எனவும் கருத்துரைக்கின்றார் முதுபெரும் தமிழிசை ஆய்வாளர் மு.அருணாச்சலம் அவர்கள்.

ஈழத்தில் செவ்வியல் இசையின் அறிமுகம்

1901ஆம் ஆண்டில் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து, ஈழத்தில் விலாசமாகவும் கூத்தாகவும் நிகழ்த்தப்பட்டு வந்த பூதத்தம்பி என்னும் கதையை இசைநாடகமாக மாற்றியமைத்து நிகழ்த்தியதாக கலையரசு க.சொர்ணலிங்கம் அவர்கள் ஈழத்தில் நாடகமும் நானும் எனும் நூலில் குறிப்பிடுகின்றார். 1901ஆம் ஆண்டிற்குப் பின்னர் சங்கரதாஸ் சுவாமிகளின் ஏனைய இசைநாடகங்கள் ஈழத்தின் அனைத்து இடங்களிலும் புகழ் பெறத் தொடங்கின. ஈழத்தில் செவ்வியல் இசையானது பரவலாக்கம் பெறுவதற்கு முன்னைய காலத்தில் கூத்து, விலாசம், இசைநாடகம் போன்ற கலைகளே மக்கள் மத்தியில் புகழ் பெற்றிருந்தன.

ஈழத்தின் இசை வரலாற்றில் முன்னோடிகளாகக் கருதப்படும் புத்துவாட்டி பரம்பரையினர் மடுவம் எனப்படும் நாடகக் கொட்டகை அமைத்து இசைநாடகக் கலையை வளர்த்து வந்தார்கள். தமிழகத்தில் இருந்து ஈழத்திற்கு வந்த இசைநாடகக்

கலைஞர்களிடம் இவர்கள் இசையையும் கற்றார்கள். புத்துவாட்டி பரம்பரையினர் ஊடாகவே ஈழத்தில் செவ்வியல் இசையானது வளர்ச்சி பெறத் தொடங்கியது.

கூத்து, இசைநாடகக் கலைகள் மட்டுமல்லாமல் ஆலயங்களில் மங்கல இசை, திருமுறை இசை, இசைச் சொற்பொழிவு, புராண படனம் போன்ற கலைகளும் பொது மக்கள் மத்தியில் இசையின் ஈடுபாட்டினை அதிகரித்தன. எனினும் 1940ஆம் ஆண்டுகளிற்குப் பின்னர் ஈழத்து இசை மாணவர்கள் தமிழகத்தின் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்குச் சென்று கற்று வரத் தொடங்கிய பின்னரே வரன்முறையான செவ்வியல் இசைப் பாரம்பரியம் ஈழத்தில் தொடங்கியது எனலாம். இதன் பின்னர் ஈழத்தில் பல இடங்களில் இசை வகுப்புக்கள் இடம்பெறத் தொடங்கியதுடன் இசை நிறுவனங்களும் அதிகமாகத் தோன்றின. தொடர்ச்சியான இசை விழாப் பாரம்பரியங்களும் வளர்ச்சி பெற்றன.

பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் செவ்வியல் இசையானது மாணவர்களுக்கான பாடமாகவும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அரச அங்கிகாரம் பெற்ற கலையாகச் செவ்வியல் இசையானது தற்காலத்தில் ஈழத்தில் வளர்க்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஈழத்தின் தமிழிசைப் பாடல்கள்

சுவாமி விபுலானந்த அடிகள், தவத்திரு ஆறுமுக நாவலர், தவத்திரு யோக சுவாமிகள், உடுப்பிட்டி சிவசம்புப் புலவர், கல்லடி வேலுப்பிள்ளை, இயலிசை வாரிதி ந.வீரமணி ஐயர், அருட்கவி விநாசித்தம்பிப் புலவர், பொன்னாலை சிவகுருநாதன், மீசாலை அ.க.ஏரம்பமூர்த்தி, பொன்னாலை வரகவி கிருஸ்ணபிள்ளை, பண்டிதர் க.வீரகத்தி, வித்துவான் சி.கார்த்திகேசு, முழக்கம் முருகப்பா, சின்னக்குட்டி கணபதிப்பிள்ளை, கவிஞர் இ.முருகையன், கவிஞர் உருத்திரமூர்த்தி, கவிஞர் நீலாவணன், சங்கீதபூசணம் திலகநாயகம் போல், பத்தினியம்மா திலகநாயகம் போல், சங்கீதவித்துவான் பொன்.ஸ்ரீவாமதேவன், கவிஞர் சோ.பத்மநாபன் போன்ற பலர் நூற்றுக்கணக்கான தமிழிசைப் பாடல்களைக் கீர்த்தனை வடிவில் இயற்றியுள்ளனர். இப்பாடல்கள் பொருட்செறிவும் ஆன்மீக வெளிப்பாடும் கொண்டவை என்பதுடன் ஈழத்தின் தனித்துவங்களை அடையாளப்படுத்தியிருக்கும் சிறந்த படைப்புக்களாகவும் விளங்குகின்றன.

ஈழத்திற்கென்றோர் தேசியக் கலை வடிவமாக ஈழத்தின் தமிழிசைப் பாடல்களைக் கருத முடியும். ஏனெனில் இப்பாடல்கள் ஆலயங்களின் வரலாறுகளையும் மூலமூர்த்தியின் சிறப்புக்களையும் ஊர்களின் பெயர்களையும் கொண்டவைகளாகவே இயற்றப்பட்டுள்ளன. அத்துடன் அனைவரும் விளங்கிக் கொள்ளக்கூடிய எளிமையான மொழி நடையைக் கொண்டவைகளாகவும் ஈழத்துத் தமிழ் வழக்கில் எழுதப்பட்டவைகளாகவும் காணப்படுகின்றன. குறிப்பாகத் தவத்திரு யோகசுவாமிகளின் பாடல்கள் உச்சமான ஆன்மீகத்தை யாழ்ப்பாணத் தமிழில் வெளிப்படுத்தியிருப்பதை எடுத்துக்காட்டாகக் குறிப்பிட முடியும்.

ஆயிரக்கணக்கான தமிழிசைப் பாடல்கள் ஈழத்தில் தோன்றியிருப்பினும் அவை இசையரங்குகளில் இசைக்கப்படுவதில்லை. இப்பாடல்கள் அனைத்தும் ஈழத்தின் சைவாலயங்களைப் பற்றியதாக அமைந்துள்ளன. எனினும் ஈழத்தின் இசையாளர்கள் இப்பாடல்களைத் தமது அரங்குகளில் இணைத்துக் கொள்ள முயற்சிக்கவில்லை. ஈழத்து இசையாளர்களின் மனோநிலை, அர்ப்பணிப்பு, இரசிகர்களின் பண்புகள், ஈழத்தின் இசை கற்பித்தல் முறைமை, கலைத்திட்டம் போன்றவற்றில் இருக்கின்ற பலவீனங்களே ஈழத்தின் தமிழிசை வளர்ச்சியடையாமைக்கான முதன்மையான காரணங்களாகவும் சவால்களாகவும் உள்ளன. தென்னிந்தியத் தமிழ்த் திரைப்படங்களும் அதன் இசையும் ஈழத்தின் இசை மரபில் மட்டுமல்லாமல் ஏனைய கலைச் செயற்பாடுகளிலும் தாக்கம் செலுத்தி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். தமிழிசை செழித்தோங்க வேண்டிய சைவாலயங்கள் தமிழ்த் திரைப்பட இசையின் முதன்மையான தளமாக மாறிவிட்டது.

ஈழத்தின் தமிழிசை வளர்ச்சியடையாமைக்கான காரணங்கள்

செந்தமிழ்ப் புலவர்களும் இசைத்திறன் கொண்ட இசையாளர்களும் ஈழத்தில் இசைத்தொண்டாற்றி வந்தாலும் ஈழத்துத் தமிழிசை உரிய முறையில் வளர்ச்சியடையவில்லை எனலாம். இதற்கான காரணங்களைப் பின்வருமாறு வகைப்படுத்திக் கொள்ள முடியும்.

இசையாளர்களின் சிந்தனை

ஈழத்து இசையாளர்கள் பலர் தமிழ் அல்லாத மொழிப் பாடல்களிலேயே ஆற்றுகை, ஆசிரியத்துவம் ஆகிய துறைகளில் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர். தாம் சிறுவயதில் கற்றுக் கொண்ட பிறமொழிப் பாடல்களையே தொடர்ச்சியாக இசைத்து வருவதுடன் தமது மாணவர்களுக்கும் கற்பித்து வருகின்றனர். அத்துடன் தமிழ்க் கீர்த்தனைகளை இசைப்பதில் நாட்டம் குறைந்தவர்களாகவும் காணப்படுகின்றனர். அரிதாகவே இசையரங்கின் நிறைவில் சில தமிழ்ப் பாடல்களைச் "சில்லறை" என்னும் அடிப்படையில் இசைத்து வருகின்றனர். முழுமையாகத் தமிழர்கள் வாழும் இடங்களிலும் தமிழ் மொழியை மட்டும் பேசுவோர் கூடும் இடங்களிலும் பிறமொழிப் பாடல்களைப் பாடுவது தவறானது என்று சிந்திக்கும் ஆற்றல் குறைந்தவர்களாகவும் ஈழத்தின் இசையாளர்கள் காணப்படுகின்றனர்.

எனினும் ஈழத்தில் சில இடங்களில் நடைபெறுகின்ற தமிழிசை விழாக்களில் தமிழகத்தின் ஆலயங்கள் மீதான பாடல்களே பெருமளவாகப் பாடப்படுகின்றன. சில ஈழத்துப் பாடல்கள் ஈழத்தின் இசையரங்குகளில் இசைக்கப்படுகின்றன. சாரங்கன் மருகனே, செல்லக்கனிவாயால், சின்ன வயதினிலே, என்முகம் பாரையா சண்முகனே, சுட்டிபுரம் வாழும் சிவ சுந்தரியே, வண்ண வண்ணச் சேலை கட்டும் மீனாட்சி போன்ற இயலிசைவாரிதி ந.வீரமணி ஐயர் அவர்களின் பாடல்கள் குறிப்பிடத்தக்கவை ஆகும். இவை மகாராஜபுரம் வி.சந்தானம், சீர்காழி எஸ்.கோவிந்ராஜன் ஆகியோரால் இசையமைக்கப்பட்டு ஆற்றுகை செய்யப்பட்ட பாடல்கள் ஆகும்.

ஈழத்துப் பாடல்களைத் தெரிந்தெடுத்து அவற்றிற்குத் தரமான இசைவடிவத்தைக் கொடுத்து ஈழத்து இசைமரபினை வளப்படுத்தக் கடந்த காலத்தில் ஈழத்தின் இசையாளர்கள் முயற்சிக்கவில்லை எனலாம். ஈழத்துப் பாடல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் எனும் சிந்தனை ஈழத்தின் இசையாளர்களிடம் வளர்க்கப்படவில்லை. எனினும் 1970ஆம் ஆண்டளவில் ஈழத்தின் தமிழ் மெல்லிசைக் கலையானது இலங்கை வானொலி ஊடாகப் புகழ் பெற்றிருந்தது. தற்போது அப்பாடல்களை எவரும் பாடுவதில்லை.

நூல் வெளியீடுகள்

ஈழத்தின் இயலிசைப் புலவர்களால் வெளியிடப்பட்டிருக்கும் கீர்த்தனைகளின் தொகையானது பல ஆயிரங்களைத் தாண்டியதாக இருப்பினும் அவை சுரக்குறிப்புடன் நூல் வடிவில் வெளியிடப்படவில்லை. பாடல்களுக்கான இராகங்களும் தாளங்களுமே அந்நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இதனால் ஒரு பாடலை ஒரு இராகத்தில் வெவ்வேறு விதமான மெட்டுக்களில் தமது கற்பனை வளத்திற்கு ஏற்ப சில பாடகர்கள் இசைக்க முயற்சிக்கின்றனர்.

மும்மூர்த்திகள் முதலான வாக்கேயக்காரர்களின் உருப்படிகள் சுர, தாளக் குறிப்புக்களை அடிப்படையாகக் கொண்டே இன்று வரை பாதுகாக்கப்பட்டும் கற்பிக்கப்பட்டும் இசைக்கப்பட்டும் வருகின்றன என்பது சுர, தாளக் குறியீட்டு முறைமையின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் உள்ள சிவதொண்டன் நிலையத்தால் வெளியிடப்பட்ட நற்சிந்தனைக் கீர்த்தனைகள் எனும் நூல், இயலிசை வாரிதி ந.வீரமணி ஐயர் அவர்களின் தாய் இராகக் கீர்த்தனைகள், அ.க.ஏரம்பமூர்த்தி அவர்களின் கீர்த்தனை மாலை, எல்.திலகநாயகம் போல் அவர்களின் செந்தமிழ்ச் செவ்விசைப் பாக்கள் போன்ற நூல்கள் மட்டுமே சுரதாளக் குறிப்புகளுடன் வெளியிடப்பட்டுள்ளன. எனினும் இந்நூல்களில் இருக்கும் பாடல்கள் இசையரங்குகளில் இசைக்கப்படுவதில்லை.

ஏனைய கீர்த்தனை நூல்கள் அனைத்தும் இராக, தாளப் பெயர்கள் கொண்டவைகளாக மட்டுமே வெளியிடப்பட்டுள்ளன. பாடல்களுக்கான இராகங்கள் மட்டும் குறிக்கப்பட்டிருப்பதால் ஈழத்தின் தமிழிசைக்கான பாடாந்தரம் இதுவரையில் முறையாக உருவாக்கப்பட்டுப் பேணப்படவில்லை எனலாம். தற்காலத்தில் புகழ் பெற்றிருக்கும் இயலிசை வாரிதி ந.வீரமணி ஐயர் அவர்களின் ஈழத்துக் கீர்த்தனைகள் எவையும் இதுவரையில் சுரதாளக் குறியீடுகளுடன் எவராலும் வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இப்பாடல்கள் செவி வழியாகவே பேணப்பட்டு வருகின்றன. அத்துடன் ஈழத்துக் கீர்த்தனைகளைத் தமது இசையரங்குகளில் அரிதாகச் சேர்த்துக் கொண்ட குரலிசையாளர்கள் அக்கீர்த்தனைகளைத் தமது மாணவர்களுக்குக் கற்றுக் கொடுத்தமைக்கான சான்றுகளையும் காண முடியவில்லை.

தமிழகத்தில் இசை உருப்படிகளை இயற்றியோரில் அதிகமானவர்கள் இயல், இசை ஆகிய இரண்டு துறைகளிலும் ஆற்றல் கொண்டவர்களாக இருந்துள்ளனர். இதனால் பல வகையான இராகங்களிலும் தாளங்களிலும் மட்டுமல்லாமல் வெவ்வேறு விதமான யாப்பு, இலக்கியத் தன்மைகள் கொண்டவைகளாகவும் பாடல்களை இயற்றியுள்ளனர். ஒரு இசையரங்கில் தானவர்ணத்தில் இருந்து மங்களம் வரை இசைக்கப்படுகின்ற பாடல்கள் பல விதமான தன்மைகள் கொண்டவைகளாக வகுக்கப்பட்டுள்ளன.

ஈழத்தின் இசைப்பாடகர்கள் புதிய இசையாக்கங்களில் அரிதாகவே ஈடுபட்டு வருகின்றனர். செழுமையான, காத்திரமான இசையாக்கங்களை உருவாக்கும் முயற்சிகளில் ஈழத்தின் இசைத்துறை முன்னோடிகள் போதிய கவனம் செலுத்தவில்லை எனலாம். கவிஞர்கள், புலவர்கள் எனப் பலர் ஈழத்தின் இலக்கிய வரலாற்றில் தடம் பதித்திருந்தாலும் அவர்களிடம் இருந்து சிறந்த இசைப்பாடல்களைப் பெறுவதற்கு ஈழத்தின் இசையாளர்கள் முயற்சிக்கவில்லை எனலாம்.

ஈழத்தின் இயற்றமிழ் வல்லோரால் பெருமளவில் செய்யுள்களாகளே இயற்றப்பட்டுள்ளன. சில புலவர்களால் இயற்றப்பட்டிருக்கும் பாடல்கள் ஆதி தாளத்தில் சதுஸ்ர நடையிலேயே அமைக்கப்பட்டுள்ளன. கண்ட சாபு, மிஸ்ர சாபு, ரூபகம், திஸ்ர நடை போன்ற வகைப்பாடுகளில் ஈழத்துப் பாடல்களை அரிதாகவே காணமுடிகிறது. இந்த ஆய்விற்காக முந்நூறு கீர்த்தனைகளைத் தெரிவு செய்த போது அவற்றில் 240 கீர்த்தனைகள் ஆதி தாளத்திலே அமைந்துள்ளதைக் அவதானிக்க முடிந்தது. எனினும் செந்நெறி இசையாற்றுகையாளர்களால் இயற்றப்பட்ட சில கீர்த்தனைகள் இராக, தாள, எடுப்பு நுட்பங்கள் கொண்டவைகளாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஈழத்தில் முன்னெடுக்கப்படும் பதிப்பு, இறுவட்டு வெளியீடுகள் முறையாகச் சந்தைப்படுத்தப்படாமையும் தமிழிசையின் பரவலாக்கத்தில் மந்த நிலையை ஏற்படுத்தி வருகின்றது. நூல்களைச் சந்தைப்படுத்தும் பொறிமுறை பதிப்பகங்கள் ஊடாகவோ ஏனைய நிறுவனங்கள் ஊடாகவோ ஈழத்தில் முன்னெடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதனால் கலைஞர்களின் சுய முயற்சியிலேயே இவ்வாறான வெளியீடுகள் நடைபெற்று வருகின்றன. ஆயிரம் பிரதிகளைப் பதிப்பிக்கும் நூலாசிரியரால் நூறு பிரதிகளைக்கூடச் சந்தைப்படுத்த முடிவதில்லை. போதிய விளம்பரமின்மையாலும் சரியான சந்தைப்படுத்தல் இல்லாத காரணத்தாலும் ஈழத்துப் படைப்புக்கள் வெளிக்கொணரப் படவில்லை எனலாம்.

ஊடகங்களின் செயற்பாடுகள்

ஈழத்தில் இயங்கி வருகின்ற எந்தவொரு ஊடகமும் ஈழத்துக் கலைகளிற்கோ, கலைஞர்களிற்கோ முக்கியத்துவம் கொடுப்பதில்லை. பத்திரிகைகள்

செய்திகளாலும் விளம்பரங்களாலும் பெரும் வருவாயை எட்டுகின்றன. ஈழத்தின் தொலைக் காட்சிகள் தமிழ் நாட்டுத் தொலைக்காட்சி நாடகங்களிற்காகவும் அங்கு ஒளிப்பதிவு செய்யப்பட்ட ஏனைய நிகழ்வுகளிற்காகவும் அதிக நேரத்தைச் செலவழிக்கின்றன. கலைச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் திட்டங்கள் ஈழத்தின் தொலைக்காட்சி நிறுவனங்களிடம் இதுவரையில் இருந்ததில்லை.

ஈழத்தின் முழுமையான கலைவளர்ச்சியின் ஓர் அங்கமாகவே ஈழத்துத் தமிழிசை வளர்ச்சியையும் பார்க்க முடியும். இலத்திரனியல் மயப்பட்டு வரும் தற்கால உலகில் சிறந்த கலை இரசனையை மக்களிடம் கொண்டு செல்லவேண்டியது ஊடகங்களின் முதன்மையான கடமையாகும். தைப் பொங்கல், சித்திரைப் புத்தாண்டு, தீபாவளி போன்ற நாட்களில் சில நிமிட இசையரங்குகள் மட்டுமே ஈழத்தின் தொலைக் காட்சிகளில் ஒளிபரப்பப்படுகின்றன.

மந்த நிலையில் இருக்கும் ஈழத்துக் கலைகளிற்குப் புத்துயிர் அளிக்க வேண்டும் என்னும் சிந்தனை ஈழத்தின் எந்தவொரு ஊடகத்திற்கும் இல்லை என்றே கூறலாம். வியாபார நோக்கத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு செயற்படும் ஈழத்து ஊடகங்கள் கலை வளர்க்கும் செயற்பாடுகளை முன்னெடுக்கத் தவறியுள்ளன. இவற்றின் முதன்மையான ஒளிபரப்புக்களாகத் தென்னிந்தியத் தமிழ்த் திரைப்படங்களும் அவற்றின் பாடல்களும் நகைச்சுவைக் காட்சிகளுமே காணப்படுகின்றன. ஈழத்தின் தமிழிசையை ஈழத்தின் ஊடகங்கள் கண்டுகொள்ளவில்லை.

ஈழத்துத் தமிழிசை பற்றிய விழிப்புணர்வு இன்மை

பாடசாலைகளில் ஆண்டு தோறும் நடைபெறுகின்ற மாணவர்களிற்கான இசைப் போட்டிகளில் ஈழத்துப் பாடல்களிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை. தமிழகத்தின் ஆக்கங்களே முதன்மை பெற்று நிற்கின்றன. மஹாகவி பாரதியார், பாரதிதாசன் ஆகியோரின் பாடல்களே பல ஆண்டுகளாகப் போட்டிக்கான கவிதைகளாகத் தெரிவு செய்யப்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில் ஈழத்துக் கவிதைகள் இணைக்கப்படுகின்றன. இதனால் எதிர்காலத் தமிழ்ச் சமூகமானது “ஈழத்துக் கலைகள்” , “ஈழத்தின் தமிழிசை” என்னும் சிந்தனை அற்ற பண்பு கொண்டதாக உருவாகப் போவதை எவராலும் தடுக்க முடியாது.

ஈழத்தமிழர்களின் தொன்மையான கலைவடிவமான கூத்துக் கலையானது தற்காலத்தில் அண்ணாவி மரபில் இருந்து விலகிய கலப்படக் கூத்தாக மாறிவிட்டது. கூத்து எனும் கலையானது பண்டிதர்களால் உருவாக்கப்பட்ட நாட்டாரியற் கூறுகளை அடிப்படையாகக் கொண்ட கலை என்பது குறிப்பிடத்தக்கதாகும். தமிழிசையின் அடிப்படைகளைக் கூத்தில் இருந்தே தொடங்க வேண்டும் என்கிறார் பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை. கூத்துக் கலைக்கான மரபுவழியான பாணியைத் தற்காலத்தில் காண முடியவில்லை. நவீன நாடக அரங்கியலாளர்கள் இக்கலையை மலினப்படுத்தி விட்டார்கள். ஊடகங்கள் இவற்றை ஊக்கப்படுத்தி வருகின்றன.

இந்நிலையில் ஈழத்திற்கென்று தனித்துவமானதோர் கலை மரபும் தமிழிசைப் பாரம்பரியமும் உண்டு, அதனை எழுச்சி கொள்ளச் செய்ய வேண்டும் என்னும் விழிப்புணர்வு அற்றவர்களாகவே ஈழத்தின் ஊடகத்துறையினர் காணப்படுகின்றனர். தற்கால ஊடகவியலாளர்கள் அடிப்படைத் தமிழறிவு அற்றவர்களாக இருப்பதும் ஊடகத்துறையின் பலவீனத்தை வெளிப்படுத்துகின்றது.

ஈழத்தில் நடைபெறும் இசைவிழாக்கள்

தமிழிசையை அடிப்படையாகக் கொண்ட இசை விழாக்கள் ஈழத்தில் நிகழ்த்தப்படுவது மிகவும் குறைவானது என்றே கூறலாம். யாழ்ப்பாணத்தில் நல்லூர்க் கந்தன் ஆலயப் பெருந்திருவிழாக் காலத்தில் இருபத்தைந்து நாட்களும் தொடர்ச்சியாக நிகழ்த்தப்பட்டு வரும் தெய்வீக இசையரங்கில் தமிழ்க் கீர்த்தனைகள் பாடப்படவேண்டும் எனும் நியமம் ஏற்பாட்டாளர்களல் கூறப்பட்டிருப்பதால் அந்த இசைவிழாவில் பங்கு கொள்ளும் கலைஞர்கள் தமிழிசைப் பாடல்களைக் கட்டாயத்தின் நிமித்தம் இசைத்து வருகின்றனர். இவ்வாறான கட்டுப்பாடு விதிக்கப்படாமல் இருந்திருந்தால் இவ்விசை விழாவானது அதிகமான பிறமொழிப் பாடல்களைக் கொண்டதாகவே மாறியிருக்கும்.

அதைவிடப் பெரும் பொருட் செலவில் கம்பன் கழகத்தால் நிகழ்த்தப்பட்டு வரும் இசை வேள்வி எனும் தொடர் நிகழ்வானது தமிழிசையை அடிப்படையாகக் கொண்டதாக நிகழ்த்தப்படுவதில்லை. கன்னித் தமிழ் பாடிக் கம்பன் புகழ் வளர்ப்போம் எனும் மகுட வாசகத்துடன் தமிழ் இலக்கியத்தை வளர்ப்பதற்காக உருவாக்கப்பட்ட இந்நிறுவனம் தமிழிசை வளர்ச்சியில் கவனம் செலுத்துவதில்லை.

அத்துடன் கல்வி நிறுவனங்கள், பாடசாலைகள், மன்றங்கள், கழகங்கள் போன்ற எவையும் தமிழிசையை ஆற்றுகை நிலையில் வளர்த்தெடுக்கும் திட்டங்களைக் கொண்டவைகளாகக் கடந்த காலத்தில் செயற்படவில்லை. பாடத்திட்டங்களில் இவ்வாறான பாடப்பகுதிகள் இணைத்துக் கொள்ளப்படாமல் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நிறைவுரை

ஈழத்தில் புகழ் பெற்ற செவ்வியல் இசைப் பாடகர்கள், கருவி இசையாளர்கள் போன்ற எவரும் ஈழத்தின் தமிழிசையை வளர்ப்பதில் அக்கறை கொள்ளவில்லை. சிறு வயதில் கற்றுக்கொண்ட பிறமொழிப்பாடல்களை இசைப்பதிலும் கற்றுக்கொடுப்பதிலும் தமது காலத்தைக் கழித்து வந்துள்ளனர். ஆயிரக்கணக்கான தமிழிசைப் பாடல்கள் ஈழத்தின் புலவர்களால் இயற்றப்பட்டிருந்தாலும் அவற்றை இசையூட்டி ஈழத்தின் தமிழிசையை வளப்படுத்த எவரும் முயற்சிக்கவில்லை.

ஈழத்தில் முன்னெடுக்கப்படும் இசைவிழாக்களின் பார்வையாளர்களாக வருவோர் தமிழர்களாக இருந்தாலும் இசையாளர்கள் பிறமொழிப்பாடல்களுக்கே முக்கியத்துவம் கொடுத்து வருகின்றனர். தமிழில் பாடுவதை நாகரீகக் குறைவாகக்

கருதும் சிந்தனை இசையாளர்களிடம் வளர்க்கப்பட்டு வந்துள்ளது. இவ்விடயம் தற்கால இளையோரிடமும் காணப்படுகின்றது.

செழுமையான இசையூட்டல், தமிழிசைக் களப்பயிற்சி, தமிழிசை மாநாடு, ஒலிப்பதிவு வெளியீடு, ஆவணப்படுத்தல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலம் ஈழத்தின் தமிழிசையை வளப்படுத்த முடியும். இவ்வாறான செயற்பாடுகள் அரச அங்கிகாரம் பெற்ற நிறுவனங்களால் முன்னெடுக்கப்பட்டால் அவை பயன்தரக் கூடும்.

உசாத்துணைகள்

சுந்தரம்பிள்ளை செ. (1990) ஈழத்து இசைநாடக வரலாறு. இலக்கிய வட்டம்

விநாசித்தம்பி சீ. (1986) அருட்கவிக் களஞ்சியம். ஸ்ரீநாகவரதநாராயணர் தேவஸ்தானம்

வீரமணி ஐயர் ந. (1996) சௌந்தர்யலகரிக் கீர்த்தனா சதகம். தர்மசாஸ்த்தா குருகுலம்

நாராயணதாசன். (2004) பக்திரசக் கீர்த்தனைகள். வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்

சோமாஸ்கந்த சர்மா அ.நா. (1995) இருபதாம் நூற்றாண்டின் ஈழத்து இசை முன்னோடிகள். திருமகள் அழுத்தகம்

Acknowledgements

Thanks

Funding

This research received no external funding

Conflict of Interest

The authors declare no conflict of interest.”

Data Availability

The data collected from musicians

References

சுந்தரம்பிள்ளை செ. (1990) ஈழத்து இசைநாடக வரலாறு. இலக்கிய வட்டம்

விநாசித்தம்பி சீ. (1986) அருட்கவிக் களஞ்சியம். ஸ்ரீநாகவரதநாராயணர் தேவஸ்தானம்

வீரமணி ஐயர் ந. (1996) சௌந்தர்யலகரிக் கீர்த்தனா சதகம். தர்மசாஸ்த்தா குருகுலம்

நாராயணதாசன். (2004) பக்திரசக் கீர்த்தனைகள். வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்

சோமாஸ்கந்த சர்மா அ.நா. (1995) இருபதாம் நூற்றாண்டின் ஈழத்து இசை முன்னோடிகள். திருமகள் அழுத்தகம்